செய்தி வெளியீடு எண்:166 நாள் : 21.04.2015

செய்தி வெளியீடு

# மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தாய்சேய் நல உதவி மற்றும் கண்காணிப்பு மையத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் மற்றுமொரு மைல்கல் திட்டமான **தாய் சேய் நல உதவி மற்றும் கண்காணிப்பு மையத்தை,** சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (21.04.2015) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இம்மையம் மாநில அளவிலான அனைத்து தாய்சேய் நலப் பணிகளின் தகவல் மற்றும் உதவி யையமாகத் திகழும். தாய்க்கும் சேய்க்கும் பல பயனுள்ள தகவல்களை தொலைபேசி வாயிலாக இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மூலம் வழங்கப்படும்.

இம்மையம் முதற்கட்டமாக சனிக்கிழமை உள்பட காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் செயல்படும். ஏககாலத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் களஅளவில் செயல்படும் கிராம சுகாதார செவிலியர்களுக்கும் பேறுகால முன்/பின் கவனிப்பி தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களால் 30.12.2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுகின்ற 104 மற்றும் 108 சேவைகளுடன் ஒருங்கிணைந்து இம்மையம் செயல்படும். மேலும் அடுத்த கட்டமாக இம்மையம் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**சேவைகள்**

1. கர்ப்பகால கவனிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்
2. தாய்சேய் நல சேவைகள் நிர்ணயிக்கப்பட்ட தேதியினை தாய்க்கு நினைவூட்டி கர்ப்பகால கவனிப்பு உரிய சமயத்தில் கிடைக்கச் செய்தல்
3. அதிக சிக்கல் உள்ள கர்ப்பிணிகளுக்கு கர்ப்பகாலம், பேறுகாலம், மற்றும் பிரசவத்திற்கு பின் பெறவேண்டிய தாய்சேய் நலசேவைகவைகள் குறித்து வழிகாட்டுதல்களை வழங்குதல்
4. தாய்மார்களுக்கு சுகாதார விழிப்புணர்வுக்கல்வி வழங்குதல்
5. தாய்சேய் நல சேவை குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தல் ஆகிய சேவைகள் வழங்கப்பட உள்ளது.

இதுபோன்ற முனைப்பான கண்காணிப்பு நடவடிக்கைகளால் தமிழகத்தில் சிசு மற்றும் தாய்மரண விகிதத்தை மேலும் குறைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்புச் செயலர் டாக்டர் .பி,செந்தில்குமார், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திரு.மோகன் பியாரே இ,ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) செல்வி. அபூர்வா இ,ஆ,ப,, மற்றும் மருத்துவத்துறை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9